Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 08 ( 21 - 03 - 1992 ) சனிக்கிழமை ஓசை: 32

## அகதிகள் பராமரிப்பு
## ஐ. நா. தீவிர ஆலோசனை

ஐ. ந சபையின் அகதிகள் புனர்வாழ்வு அதிகாரி இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளுக்குத் தனது அமைப்பு உதவி செய்வது பற்றி இறுதி முடிவு எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார். அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் அதிகாரி ஹசிம் முக்கான் அவர்கள் தற்போது தனது அலுவலகம் அகதிகள் நாடு திரும்புவதை அவதானித்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் சுமார் 10,000 தமிழ் அகதிகள் நாடு திரும்பியுள்ளார்கள். இந்திய, சிறிலங்கா அரசுகள் இந்த ஐ.நா. அமைப்பு அகதிகள் மறுவாழ்வு பணியில் ஈடுபடுவதை விரும்புகின்றன. ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு அமைப்புக்குத் தென் இந்தியாவில் அலுவலகம் இல்லை. இந்த அமைப்பின் சட்ட திட்டங்களின்படி (4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் சமர் விரிவடைகிறது

# முன்னேறிய முதல் அணி சிதறடிப்பு

# 15 இராணுவம் பலி: பலர் படுகாயம்

## கோர குண்டுவீச்சு மத்தியில் மோதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்ந்தும் கடும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. முகாமிலிருந்து மூன்று தினங்களுக்கு முன் வெளியேறிய இராணுவத்தினர் மீது பலமுனைகளில் புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் அகோர குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல் என்பனவற்றிற்கு மத்தியிலும் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளமையால் வவுனியாவில் இருந்து மேலதிக படைகள் மணலாற்றிற்கு கனரக வாகனங்கள் சகிதம் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் வெளியேறிவந்த இராணுவத்தின் முன் அணியை பதினைந்தாம் கட்டை என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்கிச் சிதறடித்தனர். இதில், பதினைந்திற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவில் படுகாயமடைந்தனர். புலிகள் தரப்பில் இருபத்திமூன்று புலிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

மணலாறு - பதினைந்தாம் கட்டையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடும்மோதல் இடம் பெற்ற சமயம், சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மூன்று குண்டுவீச்சு விமானங்களும், ஒரு வை- 12 ரக விமானமும், வை- 08 ரக விமானம் ஒன்றும், உலங்கு வானூர்தி ஒன்றும் கடும்தாக்குதலை நடத்தின. இதேவேளை கடற்பரப்பில் இருந்து பலமான பீரங்கித் தாக்குதலும், இராணுவ முகாங்களில் இருந்து பலமான எறிகணை வீச்சும் இடம்பெற்றன.

தொடர்ந்து நேற்றும் இப்பகுதியில் பலத்த விமானக் குண்டு வீச்சும், பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 23 வேங்கைகள் வீரச்சாவு

(மணலாறு) ... பொக்கனை) ... ★ 2 ஆம் லெப்.யோகேந்திரன். நாதன் ஜீவரட்ணம் - மயி

## ஓமந்தையில் குண்டு வீச்சு; மக்கள் உடைமைகள் சேதம்

[வவுனியா]

வவுனியா மாவட்டம் ஓமந்தையிலுள்ள விளாத்திக்குளம் பகுதியில் நேற்று இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. கால்நடைகளும், பயன் தரும் மரங்களும் பலத்த பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன.

நேற்றுக் காலை 7.05 மணியளவில் இப்பகுதியை [illegible]ட்டமிட்ட மூன்று சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் அடுத்தடுத்து ஆறு குண்டுகளை வீசியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

## வடமராட்சி மீது எறிகணைத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி இடைவிடாது எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

நேற்றுக்காலை 6.30 மணி முதல் 8 மணிவரை இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, ஊறணி, பொலிகண்டி ஆகிய பகுதிகளில் இந்த எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன,

## லெப். ஆதவன் வீரச்சாவு

## இரத்தம் உடன் தேவை

[யாழ்ப்பாணம்]

இரத்தம் உடனடியாகத் தேவைப்படுவதால் வரும் திங்கட்கிழமை இரத்தம் வழங்கப் பெயர் கொடுத்தவர்கள் உடன் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பாலம் பொறுப்பாளர் அருட்திரு ஆ. சிங்கராயரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. இரத்தம் கொடுக்கப் பெயர் பதியாதவர்களும் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

மனித நேய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் குழுக்களாகச் சேர்ந்து இரத்தம் கொடுக்க ஒழுங்கு செய்தால் அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்து தரப்படும் என்றும் அந்தச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

## இராணுவப் பொருள்கள் வவுனி. மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் 'வன்னி விக்கிரம' இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற பகுதியில் விடுதலைப் புலிகளால் இராணுவப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த பகுதியினை துப்புரவு செய்யும்போதே இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருள்களின் விபரம் வருமாறு:

- ★ 203 செல் - 03
- ★ ரி-81ரைபிள்கிரனைட் - 01
- ★ ஜே.ஆர் கைக்குண்டு - 02
- ★ புகைக்குண்டு - 01
- ★ ஜி.பி.எம் ஜி. லிங் - 200

## தமிழ் அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கை முதல்கட்டம் பூர்த்தியாம்

★ ஜே.ஆர் கைக்குண்டு - 02
★ புகைக்குண்டு - 01
★ ஜி.பி.எம்.ஜி. லிங் - 200

விமானப்படைக்குச் சொந்தமான மூன்று குண்டுவீச்சு விமானங்களும், ஒரு வை- 12 ரக விமானமும், வை- 08 ரக

பகுதியில் பலத்த விமானக் கின்றன.

நடாத்தப்பட்டன.

கண்டி ஆகிய பகுதிகளில் இந்த எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழ் அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கை முதல்கட்டம் பூர்த்தியாம்

தமிழ் நாட்டிலிருந்து 1000 இலங்கை தமிழ் அகதிகள் திருக்கோணமலை வந்து சேர்ந்துள்ளனர். இவர்களின் வருகையுடன் அகதிகளை இலங்கைக்குத்திருப்பி அனுப்பும் முதற்கட்ட நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரிமுதல் இவர்கள் திருப்பி அனுப்பப்படத் தொடங்கினார்கள். இங்கு திரும்பியவர்களில் அநேகர் அரச ஊழியர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களிலும் வெளியேயும் தங்கி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# 23 வேங்கைகள் வீரச்சாவு

(மணலாறு)

நேற்று முன்தினம் மணலாறில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே 15 ஆம் கட்டையில் நடைபெற்ற உக்கிரமோதலில் 23 வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

★ மேஜர் ஜெயகரன் (கந்தையா ஐங்கரன் - புளியம்பொக்கனை)
★ லெப். ஒளியன் (சீனித்தம்பி குணரத்தினம் - பழுகாமம்)
★ லெப். புலித்தேவன் (செல்வம் செல்வேந்திரம் பன்குடா)
★ லெப். புகழ்வேந்தன் (நாகராசா சிவனேசன்-மணற்சேனை, மூதூர்)
★ 2ஆம் லெப். செல்லத்துரை (மகாலிங்கம் பாஸ்கர்-புதுகுடியிருப்பு)
★ லெப் ராகுலன் [ஐயாத்துரை சிவகுமாரலிங்கம் ஒட்டிசுட்டான்]
★ 2 ஆம் லெப். ஜெயா [மாணிக்கம் தியாகராஜா - உருத்திரபுரம்]
★ 2 ஆம் லெப்.யோகேந்திரன் [பொன்னம்பலம் ஆனந்தன் - துறைநீலாணை,மட்டக்களப்பு]
★ 2 ஆம் லெப். வாமன் [சிவலிங்கம் லிங்கன் - மாவடிச்சேனை, மூதூர்]
★ 2 ஆம் லெப். இளங்கோ [சித்திரவேல் அசோக்குமார் - கட்டைப் பறிச்சான் மூதூர்]
★ 2ஆம் லெப. அசோகன் [சுபபையா யோகராஜா - மாங்கேணி, வாழைச்சேனை]
★ 2 ஆம் லெப். சந்திரன் [இராசு ஆறுமுகம்-நெளுக்குளம், வவுனியா]
★ கப்டன். பாவலன் [சற்குணநாதன் ஜீவரட்ணம் - மயிலிட்டி]
★ லெப். சிவராஜ் [குமாரலிங்கம் மோகனதாஸ் - இத்தாவில், பளை]
★ 2 ஆம் லெப். ரஞ்சித்குமார் [குருசாமி தவராசா அடம்பன், மன்னார்]
★ வீரவேங்கை இளங்குமணன் [சுப்பிரமணியம் மகேந்திரன் - தம்பலகமம்]
★ வீரவேங்கை திருச்செல்வம் [நாகமணி பிரேமானந்தன்-பாண்டிருப்பு, கல்முனை]
★ வீரவேங்கை தில்லையழகன் [கருப்பையா சிவகுரு - பெரியதம்பனை, வவுனியா]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## லெப். ஆதவன் வீரச்சாவு



முல்லைத்தீவு சிறிலங்கா ராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது லெப். ஆதவன் [சுப்பிரமணியம் - பிரபாகரன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு] என்பவர் வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 23 பயிற்சி மருத்துவர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனைக்கு பயிற்சிக்காலச் சேவைக்காக இருபத்து மூன்று மருத்துவர்கள் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கடந்தவருடம் இவ்வாறான சேவைக்கு நியமிக்கப்பட்ட மருத்துவர்கள் தமது பயிற்சிக்காலத்தைப் பூர்த்தி செய்து வெளியேறியதையடுத்து இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தற்காலிகமாகவே நியமிக்கப்பட்டிருக்கும் இவர்கள் நிரந்தரசேவையில் இருக்கும் வைத்திய அதிகாரிகளிற்கு உதவியாக கடமையாற்றுவதன் மூலம் பயிற்சியைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும், இவர்களது பயிற்சிக்காலம் ஒருவருடம் மட்டுமேஎன்றும் இவ் வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இருபத்தியாறு மருத்துவர்களை நியமிக்கும்படி இவ் வைத்தியசாலை நிர்வாகம் கேட்டதைத் தொடர்ந்தே இவ் இருபத்தி மூன்று வைத்தியர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது. (க) (ச)

## மருத்துவர் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையைநீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக மிக விரைவில் போதனா வைத்தியசாலைகள் மகளிர் விவகாரஅமைச்சினால் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட இருக்கிறது.

இவ் வைத்தியசாலையில் நீண்ட காலமாக வைத்திய அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை நிலவி வருகிறது இப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வவுனியாவிலிருந்து படை மணலாறு நோக்கி விரைவு

(வவுனியா)

மணலாறு பகுதியில் இடம் பெற்றுவரும் சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு வவுனியாவில் இருந்து மேலதிக படையினர் செல்கின்றனர் இவர்களுடன் இராணுவத் தளபாடங்களும் கொண்டு செல்லப்படுகின்றன.

வவுனியா ஈரற்பெரியகுளம் பிரதான இராணுவ முகாமில் இருந்து ஹொரவபொத்தான வீதியூடாக பதவியா பகுதி சென்று இராணுவமணலாறுப் பகுதியைநோக்கிச் செல்கின்றனர்.

தினமும் கனரகவாகனங்கள் சகிதம் ஏராளமான படையினர் செல்வதாக வவுனியா நகரிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (தி)

## அன்னை பூபதி நினைவுக் கூட்டமும் உண்ணாவிரதமும்

தியாகச் சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும், நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று நாகர் கோவில் வடடவைப் பிரிவில் நாகதம்பிரான் கோவிலடியில் நடைபெறும்.

அடையாளஉண்ணாவிரதம் இன்று காலை எட்டு மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரை நடைபெறும். மாலை ஏழு மணிக்கு நினைவஞ்சலிக்கூட்டமும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் கருணா, நாவண்ணன், சங்கிலி ஆகியோர்கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர்.

## யாழ். வைத்தியசாலை சிறு சேவையாளர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் சிறு சேவையாளர்களுக்கான தெரிவுப் பரீட்சை ஞாயிறு, திங்கள் கிழமைகளில் நடைபெறவுள்ளன.

போதனா வைத்திய சாலையின் பரிசாரர்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமையும், தாதிமார்பரீட்சைக்கு விண்ணப்பித்தோருக்கான பரீட்சை திங்கட்கிழமையும் தாதிகள் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இவ் இரு பரீட்சைகளுக்கும் தோற்றவுள்ளபரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை வைத்தியசாலைக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [பா]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

[மணலாறு]

மணலாறு மாவட்டத்தில் பதினைந்தாம்கட்டை என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற உக்கிர மோதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள்

★ ஏ.கே.எல்.எம்.ஜி - 02
★ ரம் மகசீன் - 02
★ ரி 56-2 ரக துப்பாக்கி - 01
★ ரி 56-1 ரக துப்பாக்கிகள் - 02
★ ரி.81 ரக துப்பாக்கி - 01
★ நடுத்தர ரவைகள் - 564
★ ரி.56 ரக மகசீன் - 06
★ ரி 81 ரக மகசீன் - 04
★ ஜே. ஆர் ரக கைக்குண்டுகள் - 02
★ ஏ.கே.எல் எம் ஜி லிங் - 414
★ குண்டு துளைக்காத கவசம் - 02
★ கெல்மெற் - 01
★ சூ - 02
★ தண்ணீர்க்கான் - 03

## அகதி முகாமில் இருந்து 3குடும்ப தலைவர்கள் கைது

(திருக்கோணமலை)

திருமலை - பள்ளிக்குடியிருப்பு அகதி முகாமில் கடந்த திங்களன்று மூன்று குடும்பத் தலைவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அகதிமுகாமில் உணவு விநியோகம் நடைபெற்றுக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவப் பொருள்கள்மீட்பு

(மட்டக்களப்பு)

மண்டூரில் தேச விரோதிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த இராணுவப் பொருள்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. மண்டூர் 11ஆம் கொலனியில் வைத்து ஏ. கே. ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் இரண்டு, 50 நடுத்தர ரவைகள் என்பன புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன.

## நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

எயர் லங்கா நிறுவனத்திற்கு ஆறு விமானங்களை கொள்வனவு செய்தது தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை 64 பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 54 வாக்குகளும். எதிர்த்து 120 வாக்குகளும் கிடைத்தன.

---

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

**மருத்துவபீடம்: இறுதியாண்டு மருத்துவபீட(மீள்) பரீட்சை - 1992**

மேற் கூறப்பட்ட பரீட்சை 1992 03.30ஆம் தி ஆரம்பமாகவுள்ளது. முன்னர் அறிவித்தபடி 1992.03 23ல் ஆரம்பமாக மாட்டாது

-பதிவாளர்

(சி/4076)

---

## 1-ம் ஆண்டு நினைவு தினம்



**வீரவேங்கை கஸ்ரோ**
**(நடேசப்பிள்ளை செந்தூரன்)**

யாழ் மத்திய கல்லூரி 90-ம் ஆண்டு
கணித மாணவன்

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| --- | --- |
| 8 - 11 - 1971 | 21 - 03 - 1991 |

திதி 10 - 03 - 1992

கல்வியில் சிறந்தவனே எங்கள்
கண்ணுக்கு இனியவனே
தாய் வீடு சொந்தம் அல்ல, - என்று
தாயகம் மீட்கச் சென்றாயோ
பஸீலனை தாங்கியே எதிரிகளை
பதற வைத்த கஸ்ரோ - நீ
எங்களை பரிதவிக்க விட்டுவிட்டு
அரக்கரின் அழிப்பிற்கு ஆளாகி விட்டாயே
பெற்றவர்களின் மேலாக பேணி வளர்த்தேனே
பெரியம்மா என்றழைக்க யார் உண்டு
கண்ணா உன் ஆத்மா சாந்திக்காக
இறைவனையே வேண்டுகின்றேம்.
வீர மரணத்தை தழுவிக்கொண்ட - நீயும்
உனது மற்றும் வீர வேங்கைகளினது இலட்சியத்தை
உங்கள் சகதோழர்கள் நிச்சயம் அடைவார்கள்

18, பெருமாள் கோவில்,
தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

உனது பிரிவால்
வாடிவதங்கும்
அப்பா அம்மா - பெரியம்மா
அண்ணன், தங்கை, தம்பி

(2297)

---


## முதலுதவிக் கருத்தரங்கு

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் தீவகப் பிரிவினால் தீவக ஆசிரியர்களுக்கென நடாத்தப்படும் 'முதலுதவி கருத்தரங்கு' இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருநாட்களிலும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெறும். இக் கருத்தரங்கினை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வட மாகாண ஆணையாளர் கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களும்வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் அவர்களும் ஆரம்பித்து வைப்பார்கள்.

(22)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை காவேரி**
**(நிரஞ்சினி வைரமுத்து)**

| வீர ஜனனம் | வீர மரணம் |
| --- | --- |
| 19. 06. 1972 | 19. 03. 1991 |

திதி: 21. 03. 1992

விடியலின் பூபாள வேளைக்காயிங்கு
வேங்கையின் தானையில் இணைந்தாள்
தடைகளைத்தாண்டித் தகர்த்திடும் வேள்வியில்
தந்தனள் தமிழுக்காய் இன்னுயிர்.

உன் இலட்சியம் வெல்லும்

பொன்மணி நிலையம்,
அல்வாய் வடக்கு,

பெற்றோர், சகோதரர்,
உறவினர். (2314)

---

கரைச்சி பிரதேச சபை
பொது நூலகம்

## அன்பான வேண்டுகோள்

கிளிநொச்சி மாவட்ட பொது நூலகம் கடந்த காலங்களில் சிறந்த சேவையாற்றி வந்துள்ளது. 1990 யூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது மீண்டும் தற்போது சரடிப்போக்குச் சந்தியில் இந்த நூலகம் இயங்குகின்றது. எனவே எமது நூலகத்தில் புத்தகங்களை இரவல் எடுத்தவர்களும், பாதுகாப்புக் கருதி இந்நூல்களை எடுத்துச் சென்றவர்களும். புதிய நூல்களை அன்பளிப்பாகத் தர விரும்புபவர்களும் நூலகரிடம் அவற்றை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நா. இந்துமதி
விசேட ஆணையாளர்

(சி/4075)

---

## நினைவு கூருகின்றோம்

## 1992-03-21

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை ஈச்சிலம்பத்தைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

**ஜெகன்** ( இராசையா துரைசிங்கம் - கோவிலடி, தம்பலகாமம், திருக்கோணமலை )

கைதடியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

**நடா** ( குழந்தை நடராசா - கைதடி வடக்கு ).

1987ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது காயமுற்று பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பெரியராஜன்** ( ராஜன் - ஓமந்தை வவுனியா )

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

★ **சின்னப்பரா** ( பரராஜசிங்கம் - வட்டக்கச்சி, கிளிநொச்சி )

★ **சாந்தன்** ( இ. சாந்தகுமார் - அல்வாய் பருத்தித்துறை )

1988ஆம் ஆண்டு முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு ஆறுமாதக் குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 - தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு ஏழாலையில் இந்தியப்படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

மல்லாகம் பிரதேசப் பொறுப்பாளர் -

**லெப். சிறைவாசன்** ( தவமணிநாயகம் முரளிகிருஸ்ணா 'உதயதாரகை' மல்லாகம் )

**நாயுடு** (மல்லாகம்)

1991ஆம் ஆண்டு மன்னார் - சிலாபத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின் மூன்றாம் நாள் யுத்தத்தில் வீரச்சாவெய்திய -

**மேஜர் சதா** ( நடராஜப்பெருமாள் திலீப்குமார் - வரணி )

**லெப். நேதாஜி** ( இரட்ணலிங்கம் மங்களேஸ்வரன் - எம். 53ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர் )

2ஆம் லெப். சுமன் ( முத்துராஜா கேதீஸ்வரன் -

---

## முதலாம் ஆண்டு நினைவு மடல்




வீரஜனனம்

7. 03. 968

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





வீரஜனனம்

7. 03. 968

வீரச்சாவு

20 03. 1991

## மேஜர் ரஞ்சன் (சித்தப்பா)

### (செல்வநாயகம் தயாளன்)

அன்பின் சித்தப்பா!

''அந்நியனுக்கு எதிரான போரைத் தொடர விரும்புவோர் என்னோடு வாருங்கள் நான் உங்களுக்கு ஊதியத்தையோ, உறைவிடவிடுதிகளையோ, உணவுப் பொருள்களையோ தருவதாகத் கூறமாட்டேன் நான் பசி, தாகம் பலவந்த அணி நடைகள், போர்கள், சாவு ஆகியவற்றையே உங்களுக்குத் தருவதாகக் கூறுகின்றேன். உதடுகளால் அன்றி உள்ளத்தால் தன்னுடைய தாயகத்தை நேசிப்பவர்கள் என்னைப் பின்தொடருங்கள்.''

1849ஆம் ஆண்டில் இத்தாலிய விடுதலை வீரன் கரிபோல்டி கூறியவரலாற்றுப் புகழ் பெற்ற வாசகங்கள் இவை.

1981இல் பண்ணைப் பாசறைப் பங்காளிகள் பாகப் பிரிவினை பெற்றுப் புதிய பாதை தேடிப்போன போது வெதும்பிய உள்ளத்தோடும், வெறுங்கையோடும் நின்ற தம்பி தன்னைப்பின் தொடரும் போராளிகளுக்குத் தரக் கூடியதாயிருந்த வெகுமதிகள் இவை தவிர வேறொன்றுமில்லை.

தாயகத்தின் விடுதலையை வென்றெடுக்கப்போகும் தலைவன் இவனே என்ற திடம ன சிந்தனையுடனும் தீர்க்க தரிசனத்துடனும் தம்பியைப் பின் தொடர்ந்து நடந்த போராளிகளின் பாதையிலே நீயும் சேர்ந்து நடந்தாய் எம் மினத்தின் விடுதலைக்காக இலங்கை, இந்தியா ஆகிய இரு தேசங்களுக்கும் எதிராகப்போர் புரியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோதும் ஏங்கிக் கலங்காது களத்திலே நின்ற ஏற்றமிகு போராளிகளுள் நீயும் ஒருவனானாய்!

எங்கள் கடல்களிலே எதிரியின் கொட்டத்தை அடக்கிட இரவும், பகலும் கண்துஞ்சாது நீ கடற்கண்ணி தயாரித்ததை நாமறிவோம். இன்று எங்கள் கடல்களை எதிரிகளின் நீர்ப்புதைகுழிகளாக மாற்றி உனது தோழர்கள் நிகரில்லாக் காவியம் படைப்பதைக் காணாது நீ களத்திலே துஞ்சி விட்டாய்.

உங்கள் அமரத்துவத் தோழர்களினதும் உங்களினதும் தியாகங்கள் எங்களுக்கு நிச்சயம் வெற்றியைக்கொண்டு வரும் என்று அன்று நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் சொன்ன வாசகங்கள் நினைவுக்கு வருகின்றன.

மக்களை நேசித்தவர்கள் மக்களால் என்றும் நேசிக்கப்படுவார்கள் மண்ணுக்காக மடிந்தவர்கள் இந்த மண்ணிலே என்றும் மறக்கப்படமாட்டார்கள் இந்த வரலாற்று நியதிக்கு எம் நெஞ்சம் நிறைந்த நீயே சாட்சியாக நிற்கின்றாய்

விடுதலை வரலாறு வீரர்களாகக் களத்திலே வீழ்ந்தவர்களையே வாழ்த்தி நிற்கும். சிலாபத்துறையிலே சிங்களப்படையினருடன் சமராடிக் களத்திலே நீ வீழ்ந்து காலக் கணக்கிலே ஆண்டொன்று கழிந்து விட்டது சித்தப்பா!

ஆண்டொன்று கழிந்தாலும் ஆறாது எம் நெஞ்சம்
மண்ணி ன மீட்காது மாறாது எம் வஞ்சம்

(2315) வடமராட்சி மக்கள்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். சைமன்

(நாகராஜா மோகனரூபன்)

வீரஜனனம் 22. 05. 1971

வீரச்சாவு 21. 03. 1991

சைமன் நீ இம் மண்ணை விட்டு
வீரமரணத்தை தழுவிக் கொண்டு இன்றுடன்
ஓர் ஆண்டு நிறைவு பெறுகின்றது. - ஆனால்
நீ எம் இல்லத்தை விட்டும்
எம் இதயத்தை விட்டும் என்றும்
பிரிய வில்லை சைமா.
உன் நண்பர்கள் எம்மைத்தேடி
வரும்போது எல்லாம் உனது
வீர முகத்தை தேடிப் பார்க்கின்றோம்
உன்னைக் காணவில்லை. ஆனால் உன்முகத்தை
அவர்கள் முகத்தில் பார்க்கின்றோம்.

இவருடன் சிலாவத்துறையில் வீரமரணத்தை தழுவிக் கொண்ட அனைத்து வீர வேங்கைகளையும் நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்

வராகி கோவில்
சைமன் வீதி.
கொக்குவில் மேற்கு.

(2301)

நாயுடு (மல்லாகம்)

1991ஆம் ஆண்டு மன்னார் - சிலாபத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின் மூன்றாம் நாள் யுத்தத்தில் வீரச்சாவெய்திய -

மேஜர் சதா (நடராஜப்பெருமாள் திலீப்குமார் - வரணி)

லெப். நேதாஜி (இரட்ணலிங்கம் மங்களேஸ்வரன் - எம். 53ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர்)

2ஆம் லெப். சுமன் (முத்துராஜா கேதீஸ்வரன் - நல்லூர் பூநகரி)

சத்தியமலர் (டேவிற் தேவமலர் - தளவாய், செங்கலடி, மட்டக்களப்பு)

பாணன் (பாலசிங்கம் குணபாலன் - திருக்சேதீஸ்வரம், மன்னார்)

கப்டன் அப்பன் (சண்முகம் சிறிதரன் - தச்சன்தோப்பு, யாழ்ப்பாணம்)

லெப். கஸ்ரோ (நடேசபிள்ளை செந்தூரன் - 18, பெருமாள்கோவில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

2ஆம் லெப். நாதன் (ப சுந்தர்ராஜ் - ஜெயபுரம் - பல்லவராயன்கட்டு, கிளிநொச்சி)

சயந்தன் (செல்வராசா லோகேஸ்வன் - நவாலி, மானிப்பாய்)

சங்கர் (ரவிசங்கர் - குமுழமுனை. மணலாறு)

காந்தன் (செல்லையா ஜெயக்குமார் - பாசையூர், யாழ்ப்பாணம்)

லெப். சைமன் (நாகராசா மோகனரூபன் - கொக்குவில், யாழ்ப்பாணம்)

பீற்றர் (சத்தியநாதன் சிறிஸ்கந்தராசா - மானிப்பாய், யாழ்ப்பாணம்)

கோணேஸ் (சின்னத்தம்பி அன்னலிங்கம் - ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)

அசோக் (கனகரட்ணம் மோகனதாஸ் - திமிலைத்தீவு, புதூர், மட்டக்களப்பு)

முல்லைத்தீவில் பாம்பு கடித்ததில் எம்மைப் பிரிந்த -

றியாஸ் (இராமலிங்கம் கணேஸ் - தர்மபுரம், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4074)

### சிந்தனைக்கு

அறம் வேறு, அரசியல் வேறு என்று கருதுபவர்கள் இரண்டையுமே என்றும் விளங்கிக் கொள்ள இயலாது.

- ஜான் மார்லி -

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 21-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## சிங்கள அரசியல்வாதிகள் புரிந்து கொள்வார்களா?

தென் ஆபிரிக்காவில் நடந்தகருத்துக் கணிப்பில் அரசியல் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்என்பதற்கு ஆதரவாக வெள்ளை இனத்தவர் வாக்களித்துள்ளார்கள் சீர்திருத்தம் மேற்கொள்ளப் படவேண்டும் என்ற தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி கிளார்க்கின் கோரிக்கை இதன் மூலம் வெற்றி பெற்றுள்ளது.

உலகில் இனவெறி நாடு எனப் பலராலும் வர்ணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுவந்த நாட்டில் இன்று வெள்ளை இனத்தவரே சீர்திருத்தத்திற்கு ஆதரவு அளித்துள்ளமை என்பது பெரும் மாறுதல் என்று சொல்லலாம். கடந்த வருடத்தில் சோவியத் யூனியன் சிதைவுற்றதற்கு இதை ஒப்பிட முடியா விட்டாலும் உலகின் போக்கில் மாறுதல்கள் தெளிவாகத் தெரிகின்றன என்பதற்கு இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தென் ஆபிரிக்காவில் இன ஒடுக்கல் இன்று நேற்று ஆரம்பமானதல்ல. தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் குடியேறியதில் இருந்தே இனவெறி கடைப்பிடிக்கப் பட்டுவந்தது. இவ் இனவெறியை ஒழித்துக்கட்டுவதற்காக பல போராட்டங்கள் பலவடிவங்களில் இடம் பெற்றன. காந்தி அறிமுகப்படுத்திய சத்தியாக்கிரகப் போராட்டமும் முதன் முதலில் தென் ஆபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகவே நடத்தப்பட்டது. ஆனால், இன ஒதுக்கல் கொள்கையை வெள்ளையர்கள் கைவிடவில்லை.

ஆனால், தற்பொழுது வெள்ளையரில் ஒரு பகுதியினரின் மனமாற்றத்தால், இன ஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் வெள்ளையர் சிறுபான்மையினர். சுமார் 260 லட்சம் கறுப்பர்களும், 33லட்சம் வெள்ளையர்கள் மட்டுமே அங்கு வாழ்கின்றனர். இந்நிலையில் அரசியற் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டால், இதுவரை ஆட்சியாளர்களாக இருந்த வெள்ளை இனத்தவர்களின் மேலதிக நலன்கள் பாதிக்கப்படும் எனத் தெரிந்தும் வெள்ளையர்கள் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை வரவேற்கத் தக்கது.

தென் ஆபிரிக்காவில் வெள்ளை இனத்தவர்கள் இதுவரை அனுபவித்து வந்த சலுகைகளைப் பட்டியல் ...

# குமுதவல்லியை சி. பி. ஐ. ஒதுக்கியது ஏன்?

## ராஜீவ் கொலையில் அரங்கேறாத இரகசியம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சி. பி. ஐ யின் விசாரணை முடிவு பெறும் நேரத்தில், குமுதவல்லியின் வாக்கு மூலத்தினால் அது பிசுபிசுத்துப் போயுள்ளது.

பிரதான சாட்சியாக ராஜீவ் கொலை வழக்கில் இருந்த குமுதவல்லி சி. பி. ஐ. விசாரணையில் விசாரிக்கப்படாமலே இருக்க, டில்லியில் உள்ள வர்மா ஆணைக்குழுவின் விசாரணையில் அவரது சாட்சிகளே பிரதான இடத்தை பிடிப்பனவாக இருந்துள்ளன.

வர்மா ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்த குமுதவல்லி; கடந்த வருடம் மே 21 ஆம் திகதியன்று சிறிபெரம்புதூரில் ராஜீவ் கொலை நடந்த அந்தச் சமயத்தில் அங்கே என்ன நடந்தது? என்பதனை விவரித்துள்ளார்.

''அன்று இரவு 8 30 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்தருகேகும்மிருட்டு. ஒரேயொரு டியூப் லைட் எரிந்து கொண்டிருந்தது. பத்து பதினைந்து பேர் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள் இந்த மேடைக்கு அருகிலிருந்த பனைமரத்தடியில் நானும் மகிளா காங்கிரஸைச் சேர்ந்த சில பெண்களும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். பொட்டல் காட்டில் மேடை போட்டிருக்கிறார்களே என்று நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது, அங்கே பளிச்சென்று கலர் சேலை கட்டியிருந்த ஓர் பெண் வந்தார். வயது 22 இருக்கும். பின்னர் தாடி வைத்த ஒருவர் பிஜாமா குர்தா அணிந்த ஒருவர் சல்வார் கமீஸ் அணிந்த ஒரு பெண் ஆகியோர் வந்தனர். இவர்கள் நால்வரும் எங்களருகே வந்து உட்கார்ந்தார்கள்.''

''சல்வார் கமீஸ் அணிந்தவளு தன் கையில் சந்தன மாலை ஒன்றைபிடித்த படிகுத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்தார். சற்றுவித்தியாசமாகத் தெரிந்த அவரையே கிட்டத்தில் பார்த்துக்கொண்டிருந்தேன். பொதுவாகச்சந்தனமாலையில் குறுக்கே மூங்கில் குச்சியோ மரக்குச்சியோ இருக்கும் தனு வைத்திருந்த சந்தன மாலையின் குறுக்கே பி.வி.சி பைப் வித்தியாசமாய் தெரிந்ததை நான் குறிப்பாக கவனித்தேன். இவர்கள் ஒவ்வொருவராகப் போய் போட்டோ கிராபர் ஹரிபாபுவுடன் ஏதோ பேசுவதும் எங்களருகே வந்து உட்காருவதுமாய் இருந்தார்கள்.''

''அப்போது ஒரு கார் வந்தது. முன் சீற்றிலிருந்து மரகதம் சந்திரசேகரின் மகள் லதா பிரியகுமார் இறங்கினார். பின் சீற்றிலிருந்து லதா கண்ணனும் அவரது மகள் கோகிலாவும் இறங்கி வந்தார்கள். (இவர்கள் இருவரும் குண்டு வெடிப்பில் உயிர் இழந்தவர்கள்) அவர்களை விட்டு லதா-பிரியகுமார் பிரிந்துவேறு பக்கம் நடந்து போனார். எங்கிருந்தோ இரண்டு பெண்கள் (நளினி, சுபா) மேடையருகே வந்தனர் நிருபர்கள் பகுதியில் போய் உட்கார்ந்தனர். அவர்களைப் பொது மக்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு பொலிசார் அனுப்பிவிட்டார்கள்.''

''இதெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கையில் ராஜீவ் வரப்போகின்றார் என்று சலசலப்பு. பளிச்சென்ற சேலை அணிந்திருந்த பெண் அந்த இடத்தைவிட்டு எங்கோ போய் விட்டார். சிவராசனும் ஒதுங்கிக் கொண்டார், தனு மட்டும் ராஜீவை நெருங்கினார். அவரது நேரடிப் பார்வையில் படும்படி சற்று விலகி நின்றிருந்தவர் தாடிக்காரன் மட்டும் தான். அப்போது தான் யாரும் எதிர்பாராத சம்பவம் நடைபெற்றது.''

''ஜீவ் வென்ற ஒரு தீச்சுவாலை கிளம்பி அடங்கியது எங்கு பார்த்தாலும் கூக்குரல்கள். நான் நின்ற இடத்திற்கு மிக அருகில் தாடிக்காரன் மல்லாந்து விழுந்து கிடந்தார். அதைப்பார்த்து பரபரப்போடு மீசைவைத்தபொலிஸ்அதிகாரி ஓடி வந்து ஏதோ விசாரித்தார். ஒன்று மில்லை என்று அவர் தெரிவித்தார். பின்னர் அவர் மூன்று முறை விழுந்து விழுந்து எழுந்து தடுமாறிய படி தெருவுக்குப்போனார்.''

''இதே நேரம் நாங்கள் வந்த ஒட்டோவில் (Auto) ஏறிக்கொள்ள தெருவுக்கு வந்தேன். புழுதியைக் கிளப்பிய படி அடுத்தடுத்து மூன்று கார்கள் வெளிக்கிட்டன. ஒன்று, சிவப்பு விளக்கு எரிந்தபடி! இரண்டாவது மரகதம் சந்திரசேகரை ஏற்றிக் கொண்டு, மூன்றாவது கார் கிளம்புவதற்கும் நான் அதனருகே செல்வதற்கும் சரியாக இருந்தது. ஆனால் அது கிளம்பிய வேகத்திற்கு நான் பயந்து போய் பின்னுக்கு ஓடி வந்து நின்று அந்த காரைக் கவனித்தேன். அதன் கண்ணாடிகள் ஏற்றி விடப்பட்டிருந்ததால் உள்ளே, இருந்தவர்களைப் பார்க்க முடியவில்லை'' என்று குறிப்பிட்டார். குமுதவல்லி-

''அதே போலவே பதினெட்டு நாட்கள் வரை கொலையாளிகளைப் பற்றி உருப்படியான ஒரு தகவலும் தெரியாமல் இருந்த எஸ் ஐ டி. குழம்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், ஹரிபாபு எடுத்த புகைப்படங்களைப் பார்த்து நளினி மற்றும் சுபாவை நான் அடையாளம் காட்ட அதையடுத்துத்தான் எஸ். ஐ. டி. சுறுசுறுப்பானது'' என்றும் அவர் தனது சாட்சியில் குறிப்பிட்டார்.

எஸ் ஐ. டி. அதிகாரிகளிடம் தான் சொன்ன முழுத் தகவல்களையும் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்கிற நம்பிக்கையில் குமுதவல்லி இருந்தார் என்றும்.

ஆனால் அதிகாரிகளிடம் அவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை அடுத்து வர்மா ஆணைக்குழுவிற்கு தான் நேரில் பார்த்த விடயங்களை எழுதி அனுப்பியிருக்கிறார்கள் என்றும் அதன் பிறகு தான் ராஜீவ் கொலை வழக்கில் பல திருப்பங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லதா கண்ணனும், கோகிலாவும் மரகதம சந்திர சேகரரின் காரிலிருந்து இறங்கியதைத் தான் பார்த்ததாகச் சொன்னவுடன் சில அதிகாரிகள் முகத்தைச் சுளித்தார்கள். ''அது எப்படிச் சாத்தியம்'' என்று ஏகப்பட்ட குறுக்குக் கேள்விகள் கேட்டுத் துளைத்து விடுகிறார்கள்.

> இந்திய தேசிய கிராமத் தொழிலாளர் சம்மேளனத் தலைவராகவும், மாவட்ட மகளிர் காங்கிரஸின் பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கும் திருமதி குமுதவல்லி செல்வராஜ் வர்மா ஆணைக்குழுவின் முன் அளித்த சாட்சியம் சுருக்கமாக இங்கே தரப்படுகின்றன.
> நன்றி- ஜூனியர் விகடன்

இதை வாழப்பாடி ராமமூர்த்தியிடம் நான் கூறிய போது எனக்கு வாழப்பாடி ராமமூர்த்தி ''யாருக்காகவும் கூட்டவோ, குறைக்கவோ வேண்டாம். உண்மை எதுவோ அதைச் சொல்லுங்கள்'' என்று தைரியம் அளித்திருந்தார்.

இதேபோல் டில்லியில் இருந்து வந்த சி பி ஐ உயர் அதிகாரி ஒருவரும் ஆவடி பொலிஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டரிடம் 'இவர் முக்கியமான சாட்சி பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று குறிப்பிட்டார்.

பின்னர் அவரிடம் சாட்சியளித்துக் கொண்டிருக்கையில் லதா பிரியகுமார் காரிலிருந்து லதா கண்ணன் இறங்கியதை பார்த்ததாக நான் அந்த உயரதிகாரியிடம் சொல்ல அவருடன் வந்த இன்ஸ்பெக்டர் இடைமறித்து பேசவிடாமல் செய்தார்?

இதற்கிடையில் மரகதம் சந்திரசேகரர் குழுவைச் சேர்ந்த உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர் கண்ணதாசன் என்னை கொலைமிரட்டல் செய்தார்.

இவ்வாறாக வர்மா ஆணைக்குழுவிற்கு சாட்சியளிக்கு முன்னர் எனது கருத்துக்களை சி பி ஐ.யினர் கருத்தில் கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு மேலும் உதாரணத்தை நான் கூறலாம் ''ராஜீவ் கொலை செய்யப்பட்ட அடுத்த சில நாட்களில் ஆவடியில் உள்ள இந்திரா காங்கிரஸ் பெண்மணி ஒருவரின் வீட்டில் ஒரு புதுப் பெண் தங்கியிருந்தார். இந்த நேரத்தில் சிவராசன், சுபாவைப் பற்றி போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. அந்த காங்கிரஸ் பெண்மணியின் வீட்டில் இருக்கும் புதுப்பெண் சுபா தான் என்பது தெரிந்து பொலிஸ் அதிகாரிகளிடம் நான் சொல்ல அதற்கு அந்த அதிகாரிகள் 'இந்நேரம் சிவராசனும் சுபாவும் கடல் வழியா சிலோனுக்கு அல்லவா போயிருப்பார்கள். அவர்களாவது ஆவடியில் இருப்பதாவது? என்றார்கள். அண்மையில் எஸ் ஐ டி.யிடம் பிடிபட்ட சிவராசனின் கார் டிறைவர் சொன்ன பிறகுதான் சிவராசன், சுபா ஆவடியில் தங்கியிருந்தது உறுதிப்படுத்திக் கொண்டார்கள்'' என்றார் குமுதவல்லி.

## தேயிலைத்தோட்டத்தில் மட்டும் உள்ளூர் கம்பனிகள் ஏன்?

### செல்லச்சாமி கேள்வி

(ஹற்றன்)

''இந்த நாட்டிலுள்ள பல்

## ஆப்கான்அதிபர் அறிவிப்பை பாக். வரவேற்றுள்ளது

(இஸ்லாமாபாத்)

இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதற்கு வசதியாக தான் பதவி விலகப்போவதாக ஆப்...

...யும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனிடையே ஐ நா. தலைமைச் செயலரின் பிரதிநிதி

மட்டுமே அங்கு வாழ்கின்றனர். இந்நிலையில் அரசியற் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டால், இதுவரை ஆட்சியாளர்களாக இருந்த வெள்ளை இனத்தவர்களின் மேலதிக நலன்கள் பாதிக்கப்படும் எனத் தெரிந்தும் வெள்ளையர்கள் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை வரவேற்கத் தக்கது.

தென் ஆபிரிக்காவில் வெள்ளை இனத்தவர்கள் இதுவரை அனுபவித்து வந்த சலுகைகளைப் பட்டியல் இடுவதே சிரமமானது. மொத்தத்தில் சுதேசிகளான கறுப்பர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். சட்டங்களில் கூட வெள்ளையர்களின் தவறுகளுக்கு கறுப்பர்கள் தண்டனை அனுபவித்தார்கள். குளிக்கும் கடற்கரையில் இருந்து பயணம் செய்யும் பஸ்வரையில் நிறவெறி ஆட்சி செலுத்தியது.

இதேவேளை வெள்ளை இனத்தவர்கள் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தமையானது கறுப்பின மக்களின் உரிமைகளை அவர்கள் மனப்பூர்வமாக ஆதரித்ததினால் — மனபூர்வமாக ஆதரித்த சிலரும் உண்டு- என்று சொல்லிவிட முடியாது. அங்கீகாரத்திற்கு தொடர்ந்து தென்னாபிரிக்காவில் ஏற்பட்டு வந்த உள்நாட்டு அரசியல் நெருக்கடியும் சர்வதேச அழுத்தங்களுமே காரணமாகும்.

ஆனால் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த இன ஒடுக்கல் கொள்கையை நீக்கிவிட துணிந்து முற்பட்ட ஜனாதிபதி டீ கிளார்கின் முயற்சி பாராட்டப்பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை. கருத்துக் கணிப்பு ஒன்றை அவர் அறிவித்தபோது தனது அரசியல் எதிர்காலத்தைப் பணயம் வைத்தே அறிவித்தார் என்றே சொல்ல வேண்டும். இன ஒடுக்கல் கொள்கை தொடரவேண்டும் என கன்சவேட்டிக் கட்சியினரும் நவநாசி ஆபிரிக்காளரும்தீவிரபிரசாரத்தில் ஈடுபட்டனர். தேவையானபோது வன்முறையிலும் ஈடுபட்டனர். தலைமறைவுப் போராட்டம் நடத்தப்படும் எனவும் எச்சரித்தனர். ஆனால் டி கிளார்க் தனது நோக்கத்தை மாற்றவில்லை கருத்துக் கணிப்பில் தோல்வியுற்றால் பதவி துறக்கப்போவதாகவும் அறிவித்தார். அதேவேளை கருத்துக்கணிப்பில் சீர்திருத்தவாதிகள் தோல்வி அடைந்தால் தென்னாபிரிக்காவில் ஏற்படப்போகும் அனர்த்தங்களையும் எடுத்துரைத்தார்.

இதன் மூலம் தனது முயற்சியில் டீ. கிளார்க் வெற்றி பெற்றார். டீ கிளார்க்கின் இந்த வெற்றியும் தென்னாபிரிக்க வெள்ளையரின் மனமாற்றமும் உலகில் இன்னமும் அடக்குமுறையைக் கையாளும் ஆட்சியாளருக்கும் பேரினவாதச் சிந்தனையாளருக்கும் ஓர் பலத்த அடியாகும். அதாவது அதிகார வெறியால் மக்கள் தமது அமைதியைத் தொடர்ந்தும் இழக்கவிரும்பமாட்டார்கள் என்பதும் அதேவேளை அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது நலன் என்பதைவிட நாட்டின் நலன் கருதி செயல்படுபவர்களாக இருந்தால் நாட்டில் உள்ள எப்பிரச்சினைக்கும் தீர்வுகாணலாம் என்பதற்கும் உதாரணமாகும். இதனைச் சிறிலங்கா அரசியல் வாதிகள் புரிந்து கொள்வார்களா?

# தேயிலைத்தோட்டத்தில் மட்டும் உள்ளூர் கம்பனிகள் ஏன்?

## செல்லச்சாமி கேள்வி

(ஹற்றன்)

''இந்த நாட்டிலுள்ள பல்வேறு கூட்டுத்தாபனங்களை எல்லாம் வெளி நாட்டுக் கம்பனிகள் நிர்வகிக்க முடியுமென்றால் தோட்டங்களை மட்டும் ஏன் உள்ளூர் கம்பனிகளுக்கு வழங்கவேண்டும்என்று நினைக்கிறார்கள் என்பது புரியவில்லை''

இவ்வாறு நுவரெலியாவில் நடைபெற்ற இ. தொ. கா. பேராளர் மாநாட்டில் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

தோட்டங்களை தனியார் மயப்படுத்தும்போது அவற்றைச் சிறப்பாகவும் நல்ல முறையிலும் நடத்தக் கூடிய தகுதி வாய்ந்த கம்பனிகளிடமே நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமென்பது உறுதியான கோரிக்கை. உள்ளூர்க்கம்பனிகள்மட்டுமல்ல, வெளிநாட்டுக் கம்பனிகளும் தோட்டங்களைப் பொறுப்பேற்க வகை செய்யப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

# பாடசாலை கருத்தரங்கு

பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் பொருளாளர்கள்தவறாது பின்வரும் திகதிகளில் வருகை தரும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் 23ஆம் திகதி திங்கட்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு மருதனாமடம் கோட்டத்தினர் இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. பகல்3.00மணிக்கு வடமராட்சிக் கோட்டத்தினர் வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கும், 25 ஆம் திகதி புதன்கிழமை பி பகல் 3.00 மணிக்கு யாழ் கல்விக் கோட்டத்தினர் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திற்கும், 26 ஆம் திகதி வியாழக்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு தென்மராட்சி கல்விக் கோட்டத்தினர் றிபேக் கல்லூரி மண்டபத்திற்கும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிமண்டபத்திலும் நடைபெறும்.

# நெல் உத்தரவாதவிலையை அதிகரிக்கக் கோரிக்கை

(உருத்திரபுரம்)

நெல்லின் உத்தரவாத விலையை எண்ணூறு ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி இவ்விலை நிர்ணயத்தை மேற்கொள்ளுமாறும் ஏழை விவசாயிகளை மொத்த வியாபாரிகள் சுரண்டுவதைத் தடுக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் நலன்புரிச் சங்கத்தினர் தாம் கையளித்த அம்மகஜரில் குறித்துள்ளனர்.

# பிரபல நடிகை கொழும்பில் கைது

சைப்பிரஸில் தாதிவேலை பெற்றுத் தருவதாக ஏமாற்றி இலங்கைப் பெண்களை அழைத்துச் சென்று காபரே நடனத்தில் ஈடுபடுத்திப்பணம் சம்பாதித்த பிரபல நடிகை ஒருவரை கொழும்புப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு கொம்பனி வீதி பொலிஸ் பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த போதே இவர் கைது செய்யப்பட்டார் என்றும்,

சைப்பிரசுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒரு பெண் தப்பி வந்து இங்கு பொலிசாருக்கு கொடுத்த தகவலின் பேரிலேயே இந்த விசாரணை ஆரம்பமானதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நடிகையால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கென அழைத்துச் செல்லப்பட்ட கிராமத்து இளம் பெண்களை காபரே நடனம் பயிற்றுவித்து அங்குள்ள பொதுஜன சாலைகளில் நடனம் ஆடுவதில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# 40 கோடி உதவி

மக்கள் சீனக் குடியரசு இலங்கைக்கு நாற்பது கோடியே ஐம்பது லட்சம் ரூபாவினை வட்டியில்லாக் கடனாக வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் அரசாங்கங்களுக்கும் இடையில் இணக்கம் காணப்படும் திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்காகவே இக்கடன் வசதி வழங்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கான்அதிபர் அறிவிப்பை பாக். வரவேற்றுள்ளது

(இஸ்லாமாபாத்)

இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவதற்கு வசதியாக தான் பதவி விலகப்போவதாக ஆப்கானிஸ்தான் அதிபர் நஜிபுல்லா அறிவித்துள்ளமைக்கு பாகிஸ்தான் ஆதரவு தெரிவித்து வரவேற்றுள்ளது.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடையே பேசிய பாகிஸ்தானின் வெளியுறவு இணை அமைச்சர் மேலும் கூறுகையில், ஆப்கான் அதிபர் நஜிபுல்லாவின் யோசனையை ஏற்றுக் கொண்டு ஆப்கான் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் நோக்கத்துடன் ஐ.நா அமைதி முயற்சிகளுக்கு வசதி செய்யுமாறு ஆப்கானின் பல்வேறு கிளர்ச்சிக் குழுவினரையும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனிடையே ஐ நா. தலைமைச் செயலரின பிரதிநிதி ஒருவர் காபூலில் இருந்து இஸ்லாமாபாதிற்கு திரும்பிச் சென்றுள்ளார். அவர் அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஆப்கான் பற்றிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பல்வேறு ஆப்கான் குடிகளையும் சேர்ந்த நூற்றிஐம்பது பிரதிநிதிகளின் பட்டியலையும் தயார் செய்யவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்பாக ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசு நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# காஸாப் பகுதிகளை இஸ்ரேல் மூடியது

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் காஸா நிலப்பரப்புப் பகுதியான போக்குவரத்துத் தொடர்புகளை காலவரையறையின்றி மூடி அடைத்துள்ளனர். இதன் மூலம் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் ஆளுகைக்கு உட்பட்ட இப்பகுதியல் பாலஸ்தீனியர்களே பெரும்பான்மையாக வாழ்வதோடுஅவர்களது தொழில் வாய்ப்புகளும் பெருமளவில் இஸ்ரேலுடன் தொடர்புபட்டதாகவே உள்ளது.

எனவே இத்தடை உத்தரவினால் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தமது தொழில் நிலையங்களுக்கு செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளமையால் பெருமளவு பாலஸ்தீனியர்கள்பாதிக்கப்பட்டு உள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற வளைகுடாப் போருக்கு பின்னர் இத்தகைய தடை உத்தரவு ஒன்றை இஸ்ரேலிய அதிகாரிகள் பிறப்பித்திருப்பது இதுவே முதன்முறையாகும்.

## வீட்டு வசதி கோரி

# மதுரையில் ஆர்ப்பாட்டம் பொலிசார் தடியடி

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் வீட்டு வசதி கோரி விவசாயிகள் சிலர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதைக் கலைக்க பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களது போராட்டத்தினால் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது இந்தச் சம்பவம் தொடர்பாக நான்கு பெண்கள் உட்பட இருபது பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈழநாதம்

# எயர் லங்கா விமான கொள்வனவு ஐ.தே.க. அரசாங்கத்தின் 'போபர்ஸ்'

## சுதந்திரக்கட்சிஎம். பி. குணவர்தனா

(கொழும்பு)

''ஆறு விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கென எழுபது கோடி அமெரிக்க டொலர்களை அரசாங்க நிதியிலிருந்து பயன்படுத்தியிருப்பது இந்த அரசாங்கத்தின் ''போபர்ஸ், ஊழலாகும்'' என சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. சி. வி. குணரத்னா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே சி. வி. குணரத்னா இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமான மகாவலித் திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட பணத்தின் அரைவாசித் தொகை இந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த வரவுத்திட்ட நிதியில் இருபது சத வீதத்தைக் கொண்டிருக்கும் இந்தத் தொகை ஏயர் லங்கா நிறுவனத்தைக் காப்பாற்ற முனைந்த நடவடிக்கையாகும்.

எயர் லங்கா நிறுவனம் லாபத்தில் இயங்குவதாகக் கூறும் அதேவேளை அதன் பராமரிப்புச் செலவுகளுக்காகவே அதிக பணம் செலவிடப்படுவதாக திட்டமிடல் கொள்கை அமுலாக்கல் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். பெருந்தொகைப் பணம் செலழிக்கப்படுவது அந்த நிறுவனத்தின் திறமையற்ற நிர்வாகத்தினாலாகும்.

முழு நாட்டையுமே பாதிக்கும் விதத்தில் அரசாங்கம் இந்த ஊழலுக்குத் துணை புரிந்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களுக்கும் உணவுப் பொருள்களுக்கும் நள்ளிரவு வர்த்தமானி மூலம் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன. உரம் போன்ற பொருள்களிற்கான மானியங்கள் ஒழிக்கப்பட்டன. அவ்வாறாயின் எயர் லங்காவிற்கு மாத்திரம் இத்தகைய உதவி ஏன்? என சி. வி. குணரத்னா கேள்வியெழுப்பினார்.

இப்பிரேரணையில் பேசிய லக்ஸ்மன் ஜெயக்கொடி எழுபது கோடி டொலருக்கு விமானங்களைக் கொள்வனவு செய்யும் நிலையிலா இலங்கை இருக்கிறது எனக் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்துப் பேசிய அவர் எயர் லங்கா விமான சேவையை தனியாரிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் இரகசியமான முறையில் நடைபெறுகின்றன என்றும்-

எயர் லங்கா விமானக் கொள்வனவிற்குப் பெற்ற கடனை எம்மால் மீள வழங்க முடியுமா என்றும் கேள்வியெழுப்பினார்.

இருபது கோடி ரூபாவை இலாமீட்டிய நிறுவனம் எழுபது கோடி டொலர் பெறுமதியான விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளது. இக் கடன், கடனுக்கான வட்டி ஆகியவற்றின் சுமையால் பாதிப்புறுவோர் பொது மக்களே என்றும் அவர் கூறினார்.

---

மருதனாமடம்

# கோட்டக்கல்வி அதிகாரி தீவகத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய இ சிவானந்தன் தீவுப்பகுதிக்கு இணைப்பதிகாரியாக மாற்றப்பட்டார். இவரைத் தீவகத்துக்கு மாற்றுவதற்கான உத்தரவு கொழும்பிலிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ் கோட்டக்கல்வி அலுவலக நிர்வாக அதிகாரி மட்ராஸ்மயில் வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் புதன் கிழமை இரவு கொழும்பு பயணமாகும் முன் இந்த இரு மாற்றக் கட்டளைகளையும் அனுப்பிவைத்தார் என்று கல்வித்திலணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

# குளுக்கோஸ், முட்டை வடக்கே வர தடை

வவுனியா நகரப் பகுதியிலிருந்து வடபகுதிகொண்டு செல்லப்படும் பொருள்களில் இரண்டை இராணுவம் திடீர் என்று தடை செய்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி முதல் குளுக்கோஸ், முட்டை ஆகிய இரு பொருள்களையே இராணுவம் தடை செய்துள்ளது.

இவற்றுடன் கோழி கொண்டு செல்லப்படுவதையும் இராணுவம் தடுத்துள்ளது.

இப்பொருள்களை பொது மக்கள் விடுதலைப் புலிகளுக்கு கொடுத்து அவர்களை வலிமை பெறச் செய்கின்றனர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கூறப்பட்டது. (தி)

---

# அன்னை பூபதி நினைவு நேற்றைய நிகழ்வுகள்

[நமது நிருபர்]

தியாகச் சுடர் அன்னை பூபதியின் இரண்டாம் நாள் அடையாள உண்ணாவிரதம் பண்டத்தரிப்பில் நேற்று அனுட்டிக்கப் பட்டது.

நேற்றுக்காலை 8 30 மணிக்கு பனிப்புலம் அம்மன் கோவில் முன்றலில் ஆரம்பமான இவ் அடையாள உண்ணா நோன்பில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அந்நிய ஆக்கிரமிப்புப் படைக்கெதிராக அகிம்சைவழியில் முன்னின்று முப்பத்தொரு நாட்கள் உண்ணா நோன்பிருந்து போராடி தன் கோரிக்கை நிறைவேறா நிலையில் தமிழீழ விடிவிற்காகத் தன்னை அர்ப்பணித்த அன்னை பூபதியின் வரலாறு, மற்றும் தியாகங்களைப் பற்றி உண்ணா நோன்பில் கலந்து கொண்ட மாணவர்களும், பொதுமக்களும் கவிதைகளாகவும், கருத்துரைகளாகவும் எடுத்து வழங்கினர். [ச]

---

# அன்னை பூபதி நினைவாக வன்னியில் நிகழ்ச்சிகள்

(வவுனியா)

இம் மாதம் 19 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிவரை வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் உண்ணா நோன்பிருந்து மரணித்த அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட நிர்வாகத்தினர் இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

பல இடங்களில் சிரமதானப் பணிகளும் உண்ணா நோன்பும் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

---

# மாவீரர் கலையரங்கில் மாதாந்த கலைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற்பிரிவின் யாழ் மாவட்டச் செயலகம் கோண்டாவிலில் அமைந்துள்ள மாவீரர் கலையரங்கில் நாளை 22 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு மாதாந்த கலை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இக் கலை நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக ஆதரவில் உருவான 'போர்க் குயில்' என்ற நாடகமும்,

யாழ். பல்கலைக் கழக மாணவர்களால் வழங்கும் ''காலச் சூழலில் மறையாத காலடிச் சுவடுகள்'' எனும் கவியரங்கமும்,

தென்மராட்சிப்பிரிவு கலை, பண்பாட்டுக் கழக ஆதரவில் ''மாவீரர் வரிசையிலே'' என்ற நாடகமும் நடைபெறவுள்ளது.

---

1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 22-05-1973

வீரச்சாவு: 21-03-1991

லெப். சைமன்

(நாகராசா மோகனரூபன்)

பள்ளி செல்லும் வயதிலே  
பாசறை வந்தவன் நீங்கள் எம்முடன்  
ஒன்றாக எத்தனையோ போர்க்களங்களை  
கண்ட நீங்கள் கடைசியாக சிலாவத்துறைக்கு  
எம்முடன் வந்தீர்கள் சைமன் அண்ணா-ஆனால்  
நாம் வெற்றியுடன் திரும்பி வரும்போது  
எம்மவர்களில் உங்களைக் காணவில்லையே!  
அப்போதுதான் உணர்ந்தோம் - எம்  
சைமன் அண்ணா எம் மண்ணின் விடிவுக்காக  
தன்னை அர்ப்பணித்து விட்டார் என்று  
ஆம் சைமன் அண்ணாவே உங்கள் வழியில்  
நாங்களும் நடந்து உங்கள் கனவை

---

# வவுனியாவில் 2,280 ஏக்கரில் பாரிய சிங்களக் குடியேற்றம்

[கொழும்பு]

வவுனியா மாவட்டத்தில் பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டம் ஒன்று உருவாக்கப் படவுள்ளது இதற்காக வவுனியா மாவட்டத்தில் 2,280 ஏக்கர் நிலம் தெரிவு செய்து ஒதுக்கப்பட்டுள்ளது.

1989 இல் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்த தேசிய நிலப் பயன்பாடு மற்றும் நிலப் பங்களிப்புத் திட்டத்தின் கீழ் நிலமற்ற சிங்களக் குடும்பங்களுக்கு வவுனியா மாவட்டத்தில் அமையவிருக்கும் இக் குடியேற்றத் திட்டத்தில் உள்ள தரிசு நிலங்களை பயிர்ச் செய்கைக்கு வழங்கவும் தீர்மானிக்கப்படவுள்ளது. சிங்களக் குடியேற்றக் காரரின் பயிர்ச் செய்கைக்கு உதவும் வகையில் குளங்களும், நீர் நிலைகளும் புனரமைக்கப்படவுள்ளது. தேசிய நீர்ப்பாசன புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 2000 மில்லியன் ரூபா நிதியில் ஒரு பகுதி வவுனியா மாவட்டத்திலுள்ள குளங்களைத் திருத்தி அமைக்கப் பாவிக்கப்படவுள்ளது.

---

# மாவீரர்கள் நினைவாக நாவற்குழியில் சரணாலயம்

(நமதுநிருபர்)

சிலாவத்துறை நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக தளபதி பரணி திரைநீக்கம் செய்துவைக்க மாவீரர் இல்லத்தை யாழ்மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர்

23 வேங்கைகள்

★ வீரவேங்கை இளம்வழுதி [அந்தோனிமுத்து டொமினிக் - வீடமைப்புத் திட்டம், நாவற்குழி]

★ வீரவேங்கை தமிழ்மாறன் [அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ் - தண்ணீரூற்று, முல்லைத்தீவு]

---

# மூன்று மீனவர்கள் வீடு திரும்பினர்

[குருநகர்]

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நையப்புடைக்கப்பட்டபின் குருநகர் மீனவர்கள் மூவர் ஆழ்கடலில் விடப்பட்டனர்.

கடந்த 17 ஆம் திகதி குருநகர் பகுதியிலிருந்து மீன்பிடிக்கச்சென்ற பூ.மனோன் [வயது 20], வி சந்திரன் [வயது 16], க. ரஞ்சன் [வயது 25] ஆகியோர் சென்ற வள்ளத்தில்

ஒன்றாக எத்தனையோ போர்க்களங்களை கண்ட நீங்கள் கடைசியாக சிலாவத்துறைக்கு எம்முடன் வந்தீர்கள் சைமன் அண்ணா-ஆனால் நாம் வெற்றியுடன் திரும்பி வரும்போது எம்மவர்களில் உங்களைக் காணவில்லையே! அப்போதுதான் உணர்ந்தோம் - எம் சைமன் அண்ணா எம் மண்ணின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்து விட்டார் என்று ஆம் சைமன் அண்ணாவே உங்கள் வழியில் நாங்களும் நடந்து உங்கள் கனவை நனவாக்குவோம்.


சைமன் அண்ணாவுடன் சிலாவத்துறையில் வீரச்சாவு அடைந்த அனைத்து வீரவேங்கைகளையும் நினைவு கூருகின்றோம் இந்நாளில்.

தம்புராசா எமர்சன் குடும்பத்தினர்
(2317) சிவன்பண்ணைவீதி, கொட்டடி.

## ஓராண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்

23 - 06 - 1973



வீரச் சாவு

21 - 03 - 1991

### வீரவேங்கை பீற்றர்
### (சத்தியநாதன் - சிறீஸ்கந்தராஜா)

சிலாவத்துறையதனை சிதறியடித்திடச்
சீறிய புலியே!
சிந்தை கலங்கி சிந்திய குருதியுடன் எதிரியை
ஓடிட வைத்த புலியே!
கண்ணில் உன்முகம் நிழலாடுதடா
ஓராண்டு என்ன ஒரு நூறாண்டு சென்றாலும்
உன்னை நாம் மறவோம்!

★ இவருடன் வீரச்சாவைத் தழுவிய அனைத்து வேங்கைகளையும் நினைவு கொள்கிறோம்.

- குடும்பத்தினர்

வேம்படி வீதி,
மானிப்பாய், (சி/ 4069)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

ஏக்கர் நிலம் தெரிவு செய்து ஒதுக்கப்பட்டுள்ளது.

1989 இல் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்த தேசிய நிலப் பயன்பாடு மற்றும் நிலப் பங்களிப்புத் திட்டத்தின் கீழ் நிலமற்ற சிங்களக் குடும்பங் களுக்கு வவுனியா மாவட்டத் தில் அமையவிருக்கும் இக் குடியேற்றத் திட்டத்தில் நிலம் பகிர்ந்தளிக்கப் படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒதுக்கப்பட்ட இடத்தில்

### அகதிகள் பராமரிப்பு

அகதிகள் சுயவிருப்பத்தின் பேரில் நாடுதிரும்பினால்தான் மறுவாழ்வுப் பணியில் ஈடுபட முடியும். ஐ. நா. அகதிகள்மறு வாழ்வுப்பணி அதிகாரி இந்திய அரசுடன் நாடுதிரும்பும் தமிழ் அகதிகள் பற்றிப் பேசியதாக வும், பேச்சுவார்த்தைகள் முடி வடையவில்லை என்றும் கூறி யுள்ளார்.

தமிழ் நாட்டில் அலுவலகம் அமைப்பது பற்றித் தான் டில்லியுடன் ஆலோசனை நடத்தியதாகவும் அவர் கூறி னார்.

அகதிகள் தாமாகத்தான் நாடு திரும்புகிறார்கள் என்று தோன்றினாலும், அவர்களு க்கு வட-கிழக்கு நிலைமைகள் பற்றிச் சரியான தகவல் தரப் படவில்லை என்றார் அவர்.

அகதிகள் பாதுகாப்பாக ஊர் திரும்ப முடியாத நிலை காணப்படுவதாக இந்தஐ. நா. அமைப்பு கருதுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

மடு அகதிமுகாமுக்கு வட க்கே பாலம்பிட்டி என்ற இட த்தில் மூன்றாவது அகதிகள் புனர்வாழ்வு முகாமை அமை க்க ஐ நா. அகதிகள் புனர் வாழ்வு அமைப்பு முன்வந்துள் ளது சிறிலங்கா அரசு இதை ஏற்றுக்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

### மருத்துவர்

பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அண்மையில் கொழும்புசென்ற மேற்படி வைத்தியசாலையின் உயர்மட்ட வைத்திய அதிகாரி கள் குழு போதனா வைத்திய சாலைகள் மகளிர் விவகார அமைச்சின் உயர் அதிகாரிகளு டன் நடாத்திய பேச்சுக்களை தொடர்ந்து இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இவ் வைத்தியசாலையின் பணிப் பாளர் தெரிவித்தார். (க, ச)

நிலைகளும் புனரமைக்கப்பட க்ப் பாவிக்கப்படவுள்ளது.

## மாவீரர்கள் நினைவாக நாவற்குழியில் சரணாலயம்

(நமதுநிருபர்)

சிலாவத்துறை நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக சரணாலயம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இத னைத்தொடர்ந்து நாவற்குழி மத்திய மகாவித்தியாலயத் தில் இன்று மாலை 5.30ற்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஒன் றும் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்ட தளபதி செந்தாளன் மங்கள விளக் கேற்ற தேசியக்கொடியை தென்மராட்சி விசேட தளபதி குணா ஏற்றிவைப்பார். சர ணாலயத்தை யாழ்மாவட்ட விசேட தளபதி தமிழ்ச் செல்வன் திறந்துவைக்கவுள் ளார். இதனைத்தொடர்ந்து உறுதியின் உறைவிடத்தை தமிழீழ அரசியல் பொறுப்பா ளர் தமிழ் மாறன் திரை நீக் கம் செய்துவைப்பார் கரும் புலி படத்தை தென்மராட்சி தளபதி பரணி திரைநீக்கம் செய்துவைக்க மாவீரர் இல் லத்தை யாழ்மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் ஆர்த்தி திறந்துவைப்பார். இறுதியாக மாவீரர் சுடரை யாழ்மாவட்ட அரசியல் நிர் வாக பொறுப்பாளர் இளம் பரிதி ஏற்றிவைப்பார்.

இதனைத்தொடர்ந்து தென்மராட்சி அரசியல் நிர் வாகப் பொறுப்பாளர் கந்தன் தலைமையில் நடைபெற வுள்ள அஞ்சலிக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் முக்கிய உறுப்பினர்கள் பலர் உரை யாற்றவுள்ளனர்.

இறுதியாக வலிகாமம் கலை பண்பாட்டுக்கழகத்தின் ''போர்க்குயில்'' நாடகமும் யாழ்மாவட்ட தாக்குதல் பிரி வினரின் ''களத்தில் நின்று வேங்கைகள்'' எழுச்சிப் பாடல்களும் இடம் பெறவுள் ளன.

## இளங்கோவின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்கு

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் உள்ள பதினைந்தாம் கட்டை யில் நேற்று முன்தினம் சிறி லங்கா இராணுவத்தினருக் கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நடைபெற்ற உக்கிர மோதலின் போது வீரச் சாவைத் தழுவிக் கொண்ட மூதூரைச்சேர்ந்த வீரவேங்கை இளங்கோ (சித்திரவேல் - அசோக்குமார்)வின் பூதவுடல் இன்று காலை முதல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவு ள்ளது.

வேங்கையின் பூதவுடல் காலை ஆறுமணிக்கு கொக் குவிலில் உள்ள திருக்கோண மலை தொடர்பகத்திலும் காலை ஏழுமணிக்கு கொக் குவில் மேற்கு கலைமகள் சன சமூக நிலையத்திலும் எட்டு மணிக்கு அரியாலையில் உள்ள லெப். செல்லக்கிளி வீடமைப் புத்திட்ட முகாமிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள் ளது. இதனைத்தொடர்ந்து இளங்கோவின் பூதவுடல் அங் கிருந்து ஊர்வலமாக எடுத் துச்செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைக்கப்படும்.

### வெளியேற்றும்

யிருக்கும் சுமார் இரண்டு இலட்சத்து முப்பதினாயிரம் அகதிகளில் முப்பதினாயிரம் பேர்மட்டுமே நாடு திரும்ப சம்மதித்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

### அகதிமுகாமில்

கொண்டிருந்த வேளையில் முகாமைச்சுற்றிவளைத்த சிறி லங்கா இராணுவத்தினர் அங் கிருந்த மக்களைக் கடும் சித் திரவதைக்குள்ளாக்கினர். பின் னர் அந்த முகாமிலிருந்த மூன்று குடும்பத்தலைவர்களை கைதுசெய்துகொண்டு சென் றுள்ளனர்.

ஆரியதம்பி மனோகரன் (வயது 38), புண்ணியம் கண பதிப்பிள்ளை(வயது28), குண சேகரம் கணபதிப்பிள்ளை (வயது 40) ஆகிய மூவருமே சிறிலங்கா ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களா வர்.

23 வேங்கைகள்

★ வீரவேங்கை இளம்வழுதி [அந்தோனிமுத்து டொமி னிக் - வீடமைப்புத் திட் டம், நாவற்குழி]

★ வீரவேங்கை தமிழ்மாறன் [அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ் - தண்ணீரூற்று, முல்லைத்தீவு]

★ வீரவேங்கை எல்லாளன் [நாதன் சிறீ - அக்கரைப் பற்று]

★ லெப் தங்கன் (நடராசா விமலநாதன் - ஜோப்பாய்)

★ வீரவேங்கை தங்கப்பன் கந்தையா சுரேந்திரன் (மாங்கேணி - வாழைச் சேனை)

ஆகிய 23 வீரவேங்கை களே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர். இவர் களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக்கொள்கின் றனர்.

குருநகர் மீனவர்கள் மூவர் ஆழ்கடலில் விடப்பட்டனர்.

கடந்த 17 ஆம் திகதி குரு நகர் பகுதியிலிருந்து மீன்பிடிக் கச்சென்ற பூ.மனோன் [வயது 20], வி சந்திரன் [வயது 16], க. ரஞ்சன் [வயது 25] ஆகி யோர் சென்ற வள்ளத்தில் இருந்த பாய்மரத்தைப் பிடுங்கி எறிந்தபின் ஆறு கடற்படையினர் இவர்கள் மூவரையும் தாக்கி வள்ளத் துடன் இழுத்துச் சென்று ஆழ் கடல் பகுதியில் இவர்களைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் மூவரும் பாலை தீவுக் கரையை அடைந்து அங் கிருந்து சக மீனவர்களின் உத வியுடன் நேற்று அதிகாலை இங்கு வந்து சேர்ந்தனர்

(21)

அந்நிய ஆதிக்க முகத்திரையை
கிழித்தெறிய உண்ணா நோன்பிருந்து
உயிர் நீத்த தியாகத் தீபம்

## அன்னை பூபதியின்
## 4ஆம் ஆண்டுநினைவஞ்சலி

தமிழீழம் மலர வேண்டும்என்ற உள் நோக்கம்
கொண்டாய்
உன் உயிரை தமிழ்த்தாய் மடியிற்
துறந்தாய்
மங்கையர்க்கு ஓர் வித்தாக விளங்கினாய்
என்றும் மங்காத விளக்காய் மிளிர்கின்றாய்

அன்னை பூபதிக்கு எமது சங்க சார்பிலும், சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள் சார்பிலும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம்.

வடபிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்கம்
71, கே. கே. எஸ். வீதி,
(சி/4077) கொக்குவில் சந்தி